

# சிலுவை பாதையும் பயணமும்








Ag. அல்போன்ஸ்
திருச்சி

அன்பின்மடல்

anbinmadal.org



சிலுவை பாதை
இது
நடை பயணம் அல்ல;
கண்ணீரின் வழித்தடம்.
இங்கு
ஒவ்வொரு அடியும்
ஒரு மன்னிப்பின் மொழி,
மனம்திருந்த வழி

கல்லறை நோக்கிச் செல்கிறது என்று
நினைத்த பாதை–
உயிர்ப்பின் வாசலைத் திறக்கும்
ஒரு ஆன்மீக பாதை.

சிலுவை
மரணத்தின் சின்னம் அல்ல;
மனிதன் மீண்டும்
தேவனாய் நினைவுகொள்ளும்
அடையாளம்.

வாருங்கள்–
இதயங்களைத் திறந்து.
இருகை குவித்து
சிலுவையுடன்
சேர்ந்து நடக்க.

இயேசு
இவர்
விண்ணரசின் விலாசம்

ஆதாம் விதைத்த
பாவ விதைகளை
வேரோடு பிடுங்கி எறிய
புறப்பட்டு வந்த
இரண்டாம் ஆதாம்;

ஆதி பெற்றோர் பாவத்தை
இரத்தத்தினால் சுத்திகரித்தவர்

யூதர்களின் வேள்வியில்
சத்தியத்தின் தீக்குளிப்பு

சிலுவை என்பது
தனி ஒரு மனிதனுக்கான
தண்டனை அல்ல
அது விடியலை தேடும்
மானுடத்தின்
மொத்த சரித்திரம்.

மீட்பின் சாசனத்தில்
தன் காயங்களால்
கையெழுத்திட்ட இயேசுவை
அவர் சுமந்த சிலுவையை
சிறிது சிந்திப்போம்....

விவிலியப் பக்கங்களில் இது
ரணத்தோடு வாசிக்கும் சங்கீதம்



## 1. இயேசுவுக்கு மரணத் தீர்ப்பு

நீதி தராசின் முள்ளே
நெஞ்சில் குத்திய கதை

இயேசுவின் கரங்களால்
கழுவிய கால்களின் ஈரம்
காய்வதற்க்குள்
ஒளியை இருளிடம்
காட்டிக் கொடுத்த
யூதாசின் முத்தம்;
இயேசுவை கொன்ற
முதல் அம்பு.
முத்தத்தின் சத்தம்
தோட்டமெங்கும் எதிரொலித்தது.

யூத சங்கத்திடம்
குருட்டுத் தனமாகக்
குடிகொண்டிருந்த
குரூர திட்டம்
ஒரு புறாவை
கூண்டேற்றியது.

குற்றச்சாட்டுகள்;
ஒரு புரட்சியாக
உருவெடுத்தது
சதுசேயர்கள்
முன்மொழியப் பரிசேயர்கள்
வழிமொழியக் குற்றவாளியாக
யூதர்களின் அரசர்.

வார்த்தையானவர்
மௌனமாக நின்றார்.

சத்தியம்
மௌனத்தில் நிற்க,
பொய்
கத்தலாய் அமர்ந்தது

குற்றத்தைத் தேடினான்
ரோம ஆளுநன்;

வழக்கில் சந்தித்த
சந்தர்ப்பவாதங்கள்,
சருக்கி விழுந்த
சாட்சியங்கள்,
முண்டாசு கட்டிக் கொண்டு திரியும்
முரண்பாடுகள்
முதுகெலும்பில்லாத
பிலாத்துவின் தீர்ப்பு.

விலக்கப்பட்ட கல்லை
விலக்கி வைப்பதாக எண்ணி,
விலங்கிட்டு
குற்றம் ஒன்றுமில்லை என்று
சாவுக்குக் கையளித்தான்.

கொலை,
யூத சட்டத்தின்
கலை
கலகம் அவர்கள்,
உலகம்.

விசித்திரமான
விவிலிய வழக்கு
தீர்ப்பை எழுதிக்கொண்டு தொடங்கிய
வழக்கு

இயேசுவின் மீது
வழக்கு போட்டவர்கள்
தீர்ப்பு வந்ததும்

தெரிந்து கொண்டார்கள் -
இயேசுதான் நீதிபதி என்று.

ராட்சச நகங்கள்
ரட்சகரை காயப்படுத்தின
யூத கழுகுகள்
வெள்ளை புறாவை
கொத்த தொடங்கின

தேவகுமாரனை
சவுக்கால் அடித்தார்கள்,
வானத்தை மின்னல் கிழித்துவிட
முடியாது
ஒவ்வொரு அடியிலும்
மனிதம் மீட்கப்படுகிறது

துரோகங்கள்
நியாயங்களை வென்றது - அதை
இயேசுவின்
காயங்கள் சொன்னது.



**2. சிலுவை சுமந்தார்**

சூரியன் மேல் சிலுவை
சுமத்தியது - ஒரு
விடியல் காலத்து
விளக்கு.

நொறுக்கப்பட்ட உடலோடு,
நசுக்கப்பட்ட காயங்களோடு
தேவ செம்மறி
சிலுவை சுமந்தது.

மரமல்ல அது–
உலகின் மொத்த பாவ சுமையும்
தோளில் ஏறியது.
சிலுவை அல்ல;
நம் பாவங்கள்.

எருசலேம் உள்ளே
“அரசே வாழ்க” என்று
வாழ்த்திப் பாடி
வரவேற்ற மக்கள்
மறுநாள்
சிலுவையில் அறையும்
கூக்குரலிட்டு.
மரண கைதியாக்கி
ராஜதுரோகியாக
எருசலேம் வெளியே
நாடு கடத்தியது
நன்றியுள்ள யூத இனம்.

எருசலேமே! எருசலேமே!
உன்னிடம் வரும்
இறைவாக்கினருக்கெல்லாம்
இது தான் கதியா!
இதனால் தான் இவர்
பிறந்தபொழுது
எருசலேமே நீ!
கலங்கினாயா!

ஆரம்பமானது
இரட்சணிய அரங்கில்
சிலுவை பயணத்தின்
சரித்திர ஊர்வலம்

அருவியின் பயணம்
ஆற்றை நோக்கி,
ஆறுகளின் பயணம்
கடலை நோக்கி,
கடலின் பயணம்
கரையை நோக்கி;

இயேசுவின் பயணம்
தந்தையை நோக்கி,
தந்தையின் விருப்பம்
கல்வாரியை நோக்கி.

பயணம் தொடர்வோம்;
பாதங்களுக்குக் கீழே
பூக்கள் இல்லை,
சிதறிக் கிடப்பவை
நம் பாவமுட்கள்;
இரத்தம் துடைத்து
நடந்து வருவோம்.



## 3. முதல் முறை விழுதல்

எருசலேம் வீதிகள்
இயேசுவின் பாத ரேகைகளைப் பதிவு
செய்தன.

இயேசு கீழே விழுந்தார்,
விழுந்த மானிடத்தை
தூக்கி விட.

எங்கள் வீழ்ச்சிகளில்
எங்களைத் தேடும் தேவனே
வீழ்ந்தாய்–
எழுந்திடக் கற்றுக்கொடுக்க...

பூமி தன் படைத்தவரை
ஆரத்தழுவியது.

அருகில் சென்று பாருங்கள்;
அவர் காயங்களில்
நம் பாவங்கள் தெரியும்;

அந்த இரத்தத் துளிகள்
வேர் விட்டுப் பூமியைப் பிளக்கும்.

கால்கள் நடந்தது,
கடுந்தவம் தொடர்ந்தது.



## 4. தாயைச் சந்தித்தல்

கண்கள் தன்
கண்மணியைக் கண்டதும்
கன்று தவிப்பது போலத் தாய்
கலங்கினாள்,
புலம்பினாள்.

இயேசு
சிலுவை சுமந்தபோது
அவளுக்கு
இதயம் வலித்தது.

சமாரியப் பெண் கிணற்றருகே
உயிருள்ள நீரை கண்டாள்.

தாயே, நீ இங்குக் குருதிபுனலைக்
காண்கிறாய்;
உன் மனவேதனைகளை

சொல்லி அழ
வார்த்தையில்லை.

கானா ஊரில்
நீ சொன்னதால்
நீர் திராட்சைரசமானது கல்வாரியில்
உன் முன்னே
இரத்தமாக வழிகிறது.

ஈர நினைவுகளைத் தன்
இதயத்தில் சுமந்து
மயங்கினாள்.

தனி மரமாய்
வேதனை சுமந்து
சிலுவையை தொடர்ந்தாள்,
கண்களும்
இதயமும் கலங்குகின்றன.

வார்த்தையற்ற சந்திப்பு,
கண்ணீரால் எழுதப்பட்ட
உடன்படிக்கை.
தாய்-மகன் மௌனத்தில்
உலகம் மீட்கப்பட்டது.



**5. சிமோனின் உதவி**

தந்தையின் விருப்பத்தை
உள்ளன்போடு உணர்ந்து
சிலுவையை சுமந்த இயேசு

உடல் தள்ளாடியபோது
சிமோன் தோள்கொடுத்தார்.
சிலுவை பகிர்ந்தபோது
வாழ்வு இலகுவானது.

சிமோனின் தோள்கள்
பாக்கியம் பெற்றவை;
அவர் நடந்த வீதிகள்
தவமாக மாறின.
அடியார்க்கு
அடியவர் செய்த தொண்டு;

சிமோனோடு
தோள் கொடுப்போம்,
நம் அகங்காரத்தை
விட்டுவிட்டு



**6. வெரோனிக்கா முகம் துடைத்தல்**

வாய் பேசும் மொழியைவிட
காயம் பேசும் மொழி
வலிமையானது.

அருள் வடிவம் கொண்ட
திருமுகத்தில்
இரத்தம் வழிந்தது;
எங்கிருந்தோ வந்தாள்
வெரோனிக்கா என்னும் வீரமகள்.

திருவடியைத் தொழுது
திருமகனின்
திருமுகத்தைத் துடைத்தாள்.

இயேசுவின்
இரத்தத்தில்
திருமுகத்தை பதித்து
பரிசுத்தமானது அந்தத் துணி.
கண்ணீரால் கழுவப்பட்ட
கண்களுக்குத்தான்
திருமுக தரிசனம் கிடைக்கும்.

வலியின் நடுவில் - இது
ஒரு பூவருடல் தான்.

முகம் துடைத்தாள்–
வரலாறு பதிந்தது.



## 7. இரண்டாம் முறை விழுதல்

கலிலேயா கடலில் நடந்த
கால்கள் - சிலுவையோடு,
இரண்டாம் முறை
கீழே விழுந்தன

ஞானத் திருமெனி
மண்ணில் விழ,
பூமி சிலிர்த்தது,
வானம் திகைத்தது,
காற்று திசை மாறியது;
புயல் ஒன்றில்
பூ ஒன்று தடுமாறியது.
பூவுலகமே நிலைமாறியது.

பிலாத்துவின் தீர்ப்பு
நோவாவின் பேழையை
மூழ்கடித்தது.

இயேசுவின் இரத்த வேர்வைக்கு ஒரு
விலை இருந்தது;
அது நம் பாவம்,
அவர் அன்பிற்கு
ஒரு நிழல் இருந்தது;
அது நம் மோட்சம்.

மண்ணோடு பேசும்
இரண்டாம் மௌனம்
விழுதலும்
ஒரு மொழி–
"நான் இன்னும் உன்னைத்
தேடுகிறேன்"
என்று.

மெல்ல எழுந்து
பயணம் தொடர்கிறது.



## 8. பெண்களுக்கு ஆறுதல்

சுற்றி நின்ற பெண்கள்
சுருதி சேராத
சோக ராகங்களில்.

அழுத பெண்களுக்கு ஆறுதலாய்
காயங்களால் ஒத்தடம்,
கண்ணீர் மலர்களுக்குத் தென்றலாய்
உபதேசம்.

வாடிய பயிர்கள் எழுந்து நிற்க
விடியல் வார்த்தைகளை
விதைகளாகத் தூவினார்;
கவலைகளைத் தூக்கிக் கொண்டு
திரியாதீர்கள்,
தனக்குள்
தானே கரைந்து
தன்னைத் தேடுங்கள் என்றார்.

இயேசு உரைத்தது
மகளிர்க்கு உறைத்தது
நெஞ்சத்தைக் கரைத்தது.

நண்பகல் நேரம்,
நகர்ப்புற பெண்கள்
மௌனமாக அழுது
பின் தொடர்ந்தனர்.



### 9. மூன்றாம் முறை விழுதல்

உண்மையின்
சுவடுகளில்
பொய்களின் பள்ளங்கள்.


மூலைக்கல் ஒன்று
சிலுவையோடு
இடறி விழுந்தது -
மூன்றாம் முறையாக.

உள்ளங்காலை
முத்தமிட்ட பூமி
உயிருள்ள நீரை
ஏந்தியது

சிலுவையை
தோளில் சுமந்தார்,
கருணையை
கண்களில் சுமந்தார்.
இரத்தத் துளிகள்
சிவப்பு கம்பளமாக
விரிந்திருக்க
கல்வாரி அடைந்தார்.

பாதம் பதிந்த மண்ணைத் தொடந்து
வேதம் படிப்போம்.

இதுவே வழி,
இதுவே ஒளி.



### 10. உடைகள் களையுதல்

கல்வாரி - ஒரு
மிகப்பெரிய மேடை;
இங்கே மரணத்திற்கு பின்தான்
வாழ்வு - முடிவில்லா
வாழ்வு - மரணமில்லா
பெரு வாழ்வு.

இயேசு
தான் வடித்த குருதியில்
சிவப்பானவர்.

உலகை சிவந்து விழிக்கும்
உரிமை உள்ளவர்.

சிப்பாய்கள்
சிவப்பு ஆடையைக் கழற்றினார்கள்;
காயம் பட்ட உடலிலிருந்து
இரத்தம் சிந்தியது.

ஆனால்
அன்பை யாராலும்
அகற்ற முடியவில்லை

எல்லாம் பங்கிட்டாலும்
தையல் இல்லாத ஆடைக்காகச் சீட்டு
போட்டார்கள்.

ஆடையைத் தொட்ட பெண்
நலம் பெற்றாள் - இவர்
ஆடையைப் பெற்ற வீரன்
என்னவானான்?



## 11. சிலுவையில் அறையுதல்

சிலுவையே,
உன்னை இயேசு சுமந்தார்;
பின்னர் நீ அவரைச் சுமந்தாய்;
மீட்பின் திருப்புமுனை.

நீ மனிதரைக் கூடிவாழ
சொல்லுமொரு
கூட்டல் குறி

இன்று சிலுவையின்
பெருமையைப் பார்த்து
வியக்கலாம்; ஆனால்
அந்த வாழ்க்கை
பாலைவனப் பாறைகளின் இடுக்கில்
கசிந்துதான்
இறங்கி வந்தது

கருத்த மேகங்கள்
கழுத்து சுளுக்க
அண்ணாந்து பார்த்தது
நிமிர்ந்த சிலுவையை.

“இவர்களை மன்னியும்”
என்ற உன் வேண்டுதலை
வானம் நகல் எடுத்தது.

நீ கல்வாரி மலையில்
நின்ற பிறகுதான்
வலது கள்ளன்
வானரசைக் கண்டான்.

உன்னால்தான்
தாய் எங்களுக்குத்
அறிமுகமானாள்.

தந்தை உன்னைக் கைவிட்டதும்,
உயிருள்ள நீர்
தாகம் என்றதும்,
புளித்த காடியை சுவைத்ததும்,
எல்லாம் முடிந்தது என்று
ஆவியைத் தந்ததும்–

விவிலியப் பக்கங்களில்
கைகளில் கால்களில் ஆணிகள்
இரத்தத்தின் ஈரம் இன்னும்
காயாமலே இருக்கிறது.

“முடிந்தது”
என்று சொன்ன இடத்தில்,
பாவம் மட்டும் முடிந்தது;
அன்பு
ஆரம்பமானது.



## 12. இயேசு மரித்தார்

லாசருவை உயிர்ப்பித்த
இயேசு மரித்தார்.

காற்று மரித்ததாய்
சரித்திரம் ஏது?

இயேசுவின் உடலை
ஈட்டியால் குத்தினான்
வானம் பிளந்தது.

தண்ணீரும் இரத்தமும்
கல்வாரியில்
தேங்கி வழிந்தன.

உன்னால் கல்வாரி
ஞானஸ்தானம் பெற்றது–
நீரால் அல்ல,- உன்
இரத்தத்தால் - தந்தையின்
சித்தத்தால்.

உயிர் பிரிந்த
யுக பறவையே!
உன் பிரிவு கண்டு
கண்ணீர் கசிகிறது.

இயேசுவே– நீ
மரித்த பொழுதுதான்
இறைமக்கள்
கல்லறையில் எழுந்து
உட்கார்ந்தார்கள்.

யோர்தான்
திருமுழுக்கில்
பிரிய மகனை
வாழ்த்தி
மறுரூபத்தில்
பூரித்த வானம்
உயிர்விடும்பொழுது
இருண்டது...

சிலுவையில் அறைந்தவரை
சமாரியா பெண்
மெசியா என்றாள்
பிலாத்துவின் மனைவி
நீதிமான் என்றாள்
பிலாத்து
மனிதன் என்றான்
ரோம வீரன்
இறை மகன் என்றான்
நாம் என்ன
சொல்லப்போகிறோம்?



## 13. தாயின் மடியில்

காற்றும் மகன்மீது
கடினமாக வீசாமல்,
காத்த கன்னி மரியாள்
சோர்ந்தாள்,
சாய்ந்தாள்,
கரைந்தாள்;
பனித்துளியாக

அந்தப் பனித்துளியின் மடியில்
சூரியனை கிடத்தினார்கள்...

உறக்கம் கலையாமல்
முத்தமிடும் தாய் போல
முத்தங்களால் மகனின்
இமைகளை மூடினாள்.
தொழுவத்தில் தொட்டிலில்
தாய்பால் மணக்கும்
தாலாட்டு;
கல்வாரியில்
கண்ணீர் கதறல்.

“இழந்தோம்” என்றா
அழுகிறாய் அம்மா? –
நீ இழந்தது உன் மகனை,
நாங்கள் கண்டதோ
இழந்த வாழ்வை.

அவளின் கண்ணீரில்
விறகுகள் கூட
வேர் விடும்;

நாம் சருகுகள்;
சற்று சிந்திப்போம்.



## 14. கல்லறையில் அடக்கம்

இறப்போர் கூடி
உயிருள்ளவரை
அடக்கம் செய்தார்கள்.

வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறைகள்;
உயிருள்ள கல்லைப் பூமியின்
உள்ளே வைத்தது.

வான விளிம்புவரை நேசித்தவர்
பூமியின் ஆழத்திலும்
அன்பை விதைக்கசென்றாரோ?
இயேசுவின் உடலை ஏற்றப் பூமி
மகரந்தமானது.

பிறந்தபொழுது
சத்திரத்தில் இடமில்லை,
வாழும் நாளில்
தலை சாய்க்க இடமில்லை;
உடலின் அடக்கம் கூட
அன்னியர் தோட்டத்தில்–
தாவீதின் மகனுக்கு,
யூத அரசர்க்கு
இப்படிப் பட்ட நிலை.

கல்லறையருகே
கடக்கும்போது
மெதுவாகச் செல்லுங்கள்;
உங்கள் தடங்களின்
மெல்லிய சத்தத்தில்
இயேசுவின் உறக்கம்
கலைந்து விடக்கூடும்.



## 15. இயேசு உயிர்த்தெழுந்தார்

விலக்கப்பட்ட கல்லைப்
புதைத்தார்கள்
முளைத்தெழுந்தது
மூன்றாம் நாள்.
மூலைக்கல்

மூன்றாம் நாள் -
கானா ஊரில்
நீர் திராட்சை ரசமானது;
கல்வாரியில்
இயேசு கிறிஸ்துவானார்.

மண்ணில் விழுந்த
கோதுமை மணி
மறுபடி முளைத்தது

உயிர்த்தெழுந்தது கிறிஸ்தவம்
சிந்திய இரத்தத்தாலும்,
சிந்தாத உறுதியாலும்.

இயேசு உயிர்த்தெழுந்தார் - இது

பொய்யில்லாத நிஜம்.
கடத்தப்பட்டதாக யூத அறிவிப்பு -இது
நிஜத்தில் மலரும் பொய்

தென்னை மரத்தின்
கீற்று விழுந்தது - அது
வீழ்ச்சி அன்று; வளர்ச்சி.

“அஸ்தமிப்பாய்” என்றுதான்
சிலுவையில்
அறைந்தார்கள் உன்னை;
ஆனால் நீ
விடியலை அறிவிக்கும்
விடிவெள்ளி ஆனாய்.
விண்ணரசின் கீதம்
மண்ணில் ஒலித்தது -
அல்லேலூயா!
அல்லேலூயா!

இம்மைக்குக் மறுமைக்கும்,
இனிய வாழ்விற்கும்
இன்றியமையாத இறைவனே,
இயேசுவே,
இன்றும் தேடுகிறோம்
கல்வாரியில் உன்
பாததடங்களை

## நிறைவு

சிந்திய இரத்தம்
மண்ணில் கரையவில்லை;
வரலாற்றில்
விதையாயிற்று.

அறையப்பட்டவர்
அமைதியாய் எழுந்தார்–
பகை தீர்க்க அல்ல;
உலகைத் தழுவ.
அன்பை விதைக்க

சிலுவை
மரணத்தின் அடையாளம் அல்ல–
அன்பின் கையொப்பம்.

சிலுவைப் பாதை
ஒரு சோகப் பயணம் இல்லை;
அது மனிதன் மனிதனாய் மாறி
இறைவனோடு இணையும் பாதை.

இந்தப் பாதை
மரணத்தை நோக்கி இல்லை;
இறைஅரசை நோக்கி.
இன்றும் கல்வாரி முடிவதில்லை–
ஒவ்வொரு அன்பிலும்,
ஒவ்வொரு மன்னிப்பிலும்,
தொடர்கிறது

கல்லறை வாசலில்
பாதை நிற்கிறது–
ஆனால் நம்பிக்கை
நடக்கத் தொடங்குகிறது

இது முடிவல்ல
தொடக்கம் உயிர்ப்பு
நம்முள் தொடர்கிறது.

பாதை முடிந்தது
என்று நினைத்த இடத்தில்
நம்பிக்கை
நடக்கத் தொடங்கியது.

விசுவாசம் இல்லாதபோது
சிலுவை ஒரு சுமைதான்
நம்பிக்கை இருந்தால்
சிலுவையும் ஒரு சிறகு தான்

சிலுவைப் பாதை
வேதனையின் வரைபடம் அல்ல;
மீட்பின் திசைகாட்டி.